**திருவள்ளூர் தோட்டக்கலைதுணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர் : திருமதி.ஐ.ஜெபக்குமாரிஅனி., பி.எஸ்ஸி, (தோ)**

**செ.மு.ஆ.எண்.அ1/7118/2023 (1)** **நாள்.19.06.2024**

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி- செல்வி.ஹ.அபிஷியா, இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) - இவ்வலுவலகம் பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை : 1) வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை) சென்னை அவர்களது செயல்முறை கடித எண். அநிபி5/92705/2023 நாள். 08.12.2023

2) இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை அவர்களது செயல்முறை கடித எண்.அபபி2/24910/2023 நாள். 14.12.2023

3) செல்வி.ஹ.அபிஷியா, இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) அவர்களது பணிசேர் விண்ணப்பம் நாள். 26.12.2023

-******-

**ஆணை,**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு பார்வை ஒன்று மற்றும் இரண்டில் கண்டுள்ள செயல்முறை ஆணைகளைத் தொடர்ந்து இவ்வலுவலகக் கட்டுப்பாட்டில் முதன் முதலாக 26.12.2023 முற்பகல் அன்று அரசுப்பணியில் சேர்ந்த செல்வி.ஹ.அபிஷியா, இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) அவர்களுக்கு அவர் பணியில் சேர்ந்த நாளான 26.12.2023 முற்பகல் அன்று பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்திரவிடப்படுகிறது.

மேலும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி - 34 இணைப்பு 5-ன்படி இவர் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்ட நாளில் இருந்து இரண்டாண்டு காலத்திற்குள் அரசு அலுவலருக்கான பவானிசாகர் பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும் எனவும் தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்த ஊதிய உயர்வுகள் வழங்கப்படுமென தெரிவித்து உத்திரவிடப்படுகிறது.

இவ்விவரம் தனியரது பணிப்பதிவேடு தொகுதி-1 பக்கம் எண்.60 பதியப்பட்டுள்ளதென சான்று அளிக்கப்படுகிறது.

தோட்டக்கலை துணை இயக்குநர்,
திருவள்ளூர்.

**பெறுநர்**

செல்வி.ஹ.அபிஷியா, இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) - இவ்வலுவலகம்

நகல்:- வேளாண்மை இயக்குநர், சென்னை -5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது. (அநிபி5 பிரிவு)

நகல்:- இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது (அபபி2 பிரிவு)

நகல்:- வேளாண்மை இணை இயக்குநர், திருவள்ளூர் - அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்:- பணிப்பதிவேடு

நகல்:- இருப்புக்கோப்பு